நகராட்சி அலுவலகம்
அம்பாசமுத்திரம்
நாள் : 23.01.2023

**அவசரக்கூட்டம்**

**சுபகிருது வருடம் தை மாதம் 9 ம் தேதி 2023ம் வருடம் ஜனவரி மாதம் 23ம் தேதி (23.01.2023) திங்கள்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவிருக்கிற அம்பாசமுத்திரம் நகர்மன்ற அவசரக்கூட்ட நடவடிக்கைகள்**

| Date of Council | Decision No. | Subject in Agenda | Decision of Council |
| --- | --- | --- | --- |
| 23.01.2023 | 323 | **பொருள் எண் : 1**<br>நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணைஎண்.32945/2022/E A 2-S W M -7 நாள்.10.01.2023-ன்படி அம்பாசமுத்திரம் நகராட்சிப்பகுதியில் திடக்கழிவு மேலாண்மைப்பணிகளின் கீழ் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் இருந்து மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தனித்தனியாக பிரித்து சேகரித்து மறு சுழற்சி செய்யும் இடத்திற்கு கொண்டு வர தேவையான பணியாளர்கள் , வாகனங்கள் மற்றும் தளவாடச்சாமான்கள் ஆகியவை சேர்த்து டன் ஒன்றுக்கு ரூ.4216.68 என நிர்ணயம் செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி அனுமதியின் படி மூன்றாண்டுகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி நிறுவனத்தை தேர்வு செய்து ஒப்பந்தம் வழங்கி பணி மேற்கொள்ளவும் உத்தரவிடப்பட்டுள்ளது.<br>மேற்படி பணியினை மேற்கொள்ள நகராட்சிக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.230.21 இலட்சம் செலவாகும் என்பதால் இத்தொகையை பொதுநிதி மற்றும் 15$^{TH}$ C F C ,S W M TIED ,G R A N T ஆகியவற்றில் இருந்து செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்த நிறுவனத்தை தேர்வு செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதி வழங்கப் படுகிறது |
| 23.01.2023 | 324 | **பொருள் எண் : 2**<br>அம்பாசமுத்திரம் நகராட்சி வார்டு எண் 3 எழில் நகர் அம்பை ஆலங்குளம் எழில்நகர் முக்கிய சாலையின் சந்திப்பில் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.79000- மன்றத்தின் பார்வைக்கும், மேற்காண் பணியினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு | அனுமதி வழங்கப் படுகிறது |
| 23.01.2023 | 325 | **பொருள் எண் : 3**<br>அம்பாசமுத்திரம் நகராட்சி வார்டு எண் 1 பண்ணை சங்கரய்யர் நகர் மேற்கு பகுதியில் (பூங்கா தென்புறம் உள்ள மேலத்தெரு) கடைசி பகுதியில் உள்ள மண் சாலைத்தெருவில் சுமார் 78மீ வரை புதிதாக வீடுகள் கட்டப்பட்டுள்ளது. மேற்காண் தெருவில் புதிய குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்ய நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.36000- மன்றத்தின் பார்வைக்கும், மேற்கண்ட பணியினை நகராட்சி குடிநீர் திட்டநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும். | அனுமதி வழங்கப் படுகிறது |
| 23.01.2023 | 326 | **பொருள் எண் : 4**<br>தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்புகள் 2022-23 எண் 20 ன் படி அனைத்து நகர்புற உள்ளாட்சிகளிலும் ஒரு LPG எரிவாயு தகனமேடை அமைக்கப்பட வேண்டும் என்று நகராட்சி நிர்வாக மானிய கோரிக்கையின் போது அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி அம்பாசமுத்திரம் நகராட்சி பகுதியில் தகனமேடை அமைப்பதற்காக மேலஅம்பாசமுத்திரம் வருவாய் கிராமம் புல எண் 483/1 ல் 25.50மீ x 25.00மீ (637.50 ச.மீ / 16 செண்ட்) அளவுள்ள நிலம், அம்பாசமுத்திரம் 10A காசிநாதசாமி கோவில் தெரு திருமதி.பி.ராஜலெட்சுமி என்பவரால் தமிழ்நாடு மேதகு ஆளுநர் | அனுமதி வழங்கப் படுகிறது |

<table>
<tr><td></td><td></td><td>அவர்களுக்கும், அம்பாசமுத்திரம் நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கும் நன்கொடை பத்திரம் மூலமாக வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நிலத்தினை LPG எரிவாயு தகனமேடை அமைப்பதற்காக நகராட்சி ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு<br>(ந.க.எண்.2086/2019/இ1)</td><td></td></tr>
<tr><td>23.01.<br>2023</td><td>327</td><td><u>பொருள் எண் : 5</u><br>அம்பாசமுத்திரம் நகராட்சியில் பல்வேறு திட்டப்பணிகளை செய்வதற்கு ஒப்பந்ததாரராக பதிவு செய்திட ரூ.40.00 இலட்சத்திற்கு செல்வநிலைச்சான்று (Solvency Certificate) அளித்துள்ள திருமதி.ஆ.கரிசூழ்ந்தாள் அம்பாசமுத்திரம் என்பவரின் விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும்அனுமதிக்கும்.</td><td>அனுமதி வழங்கப் படுகிறது</td></tr>
<tr><td>23.01.<br>2023</td><td>328</td><td><u>பொருள் எண் : 6</u><br>அம்பாசமுத்திரம் நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடத்தின் வசூல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 3 ஆண்டுகளுக்கு ஒப்படைப்பு செய்யும் உரிமத்திற்கு 06.01.2023 அன்று ஏலம் நடைபெற்றது. இவ் ஏலத்தில் 2 நபர்கள் கலந்து கொண்டு கீழ்க்கண்டவாறு ஏலக் கேள்வி கேட்டுள்ளதை மன்றத் தலைவர் ஒப்புதல் வழங்கியதை வ.எண் 2ல் உள்ள திருமதி.G..பார்வதி என்பவரின் அதிகபட்ச ஏலக்கேள்வி மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்
<table>
<tr><th>வ. எண்</th><th>திருவாளர்கள்</th><th>ஏலக்கேள்வி</th></tr>
<tr><td>1</td><td>திரு. K. பரமசிவன்<br>த/பெ தனுஷ்கோடி<br>38C. சிவகாமிபுரம் தெரு,<br>ஊர்க்காடு, அம்பாசமுத்திரம்</td><td>ரூ 94400/-</td></tr>
<tr><td>2</td><td>திருமதி. G. பார்வதி<br>க/பெ கோபால கிருஷ்ணன்<br>28/22A, அம்மன் சன்னதி தெரு,<br>ஊர்க்காடு, அம்பாசமுத்திரம்</td><td>ரூ 94500/-</td></tr>
</table></td><td>அனுமதி வழங்கப் படுகிறது</td></tr>
<tr><td>23.01.<br>2023</td><td>329</td><td><u>பொருள் எண் : 7</u><br>அம்பாசமுத்திரம் நகராட்சிக்குரிய பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் வழங்குவதற்காக ஏலப் பொறுப்பு தொகை ரூ 1.00 லட்சம் என நிர்ணயம் செய்யப்பட்டிருந்ததால் ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை. ஆகையால் பேருந்து வசூல் கட்டண ஏலப் பொறுப்பு தொகை ரூ 1.00 லட்சத்திலிருந்து ரூ 50000/- ஆக நிர்ணயம் செய்திடவும், ஏலம் விடவும் மன்றத்தின் அனுமதிக்கு.</td><td>அனுமதி வழங்கப் படுகிறது</td></tr>
</table>

நகர்மன்ற தலைவர்
அம்பாசமுத்திரம் நகராட்சி.